# தமிழர்களின் வாக்குகளைப் பெற இராணுவத்தை காட்டிக் கொடுக்க ரணில் விக்கிரமசிங்க முயற்சி!

## பதறுகிறார் விமல் வீரவன்ச எம்.பி



ஜனாதிபதி தேர்தலில் தமிழ் வாக்குகளை பெறுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இராணுவத்தினரை காட்டிக் கொடுக்கும் சட்டங்களை இயற்ற முயற்சிக்கிறார். சரத் பொன்சேகாவை தவிர ஏனைய இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யும் வகையில் உண்மையை கண்டறிதல் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சட்ட வரைபு தயாரிக்கப்பட்டுள்ளது என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள தேசிய சுதந்திர முன்னணியின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பொருளாதார நெருக்கடியால் ஒட்டுமொத்த மக்களும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் நாட்டுக்கு எதிரான கீழ்த்தரமான செயற்பாடுகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் அமைச்சர் பஷில் ராஜபக்ஷ ஆகியோர் முன்னெடுத்துள்ளனர். 2015 ஆம் ஆண்டு அப்போதைய வெளிவிவகாரத்துறை அமைச்சர் மங்கள சமரவீர இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்ட 30 -1 தீர்மானத்துக்கு இணை அனுசரனை வழங்கினார். இந்த தீர்மானத்தை நாட்டு மக்களும்,பாராளுமன்றமும் அப்போது அறிந்திருக்கவில்லை.

2 ➤


மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 01 வள்ளுவர் ஆண்டு 2054 தை 04 வியாழக்கிழமை 18.01.2024 கதிர் 160



JITF 2024
14th JAFFNA INTERNATIONAL TRADE FAIR
14ஆவது யாழ் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி
முற்றவெளி மைதானத்தில்
JANUARY 19 | 20 | 21


## யார் சொன்னாலும் நிறுத்தப்போவதில்லை! யுக்திய குறித்து அமைச்சர் டிரான் அலஸ்



யுக்திய - சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை யார் சொன்னாலும் நிறுத்தப் போவதில்லை!, என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு யுக்திய சுற்றிவளைப்புத் தொடர்பாக கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

"சிறைச்சாலைகளில் கூட்ட நெரிசல் தொடர்பாக உரிய அதிகாரிகள்தான் கவனம் செலுத்த வேண்டும்.

அதைவிடுத்து, சிறைச்சாலைகளில் கூட்டம் அதிகரிக்கிறது என்பதற்காக யுக்திய சுற்றிவளைப்பு நடவடிக்கையை நிறுத்துமாறு யாரேனும் கோரினால், அது உண்மையில் நகைப்புக்குரிய விடயமாகவே பார்க்கப்படும்.

சிறைச்சாலைகளில் காணப்படும் நெரிசலைக் குறைக்கும் வகையில், புதிய சிறைச்சாலைகள் இரண்டை நிர்மாணிக்க உரிய இடத்தை அடையாளம் காணுமாறு ஜனாதிபதி தெரிவித்திருந்தார். உரிய ஆலோசனைகளும் இதற்காக வழங்கப்பட்டுள்ளன.

யுக்திய நடவடிக்கையானது, குடும்பங்களை பாதுகாக்கும் செயற்பாடாகும். பெற்றோரை, சமூகத்தை பாதுகாக்கும் ஒரு செயற்பாடாகும்.

யுக்திய செயற்பாட்டை யார் சொன்னாலும் நிறுத்தமாட்டோம். இதனை நிறுத்துமாறு ஜனாதிபதி பணிக்க மாட்டார் என நாம் உறுதியாக நம்புகிறோம்" - என அமைச்சர் டிரான் அலஸ் மேலும் குறிப்பிட்டுள்ளார். (04)

## யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் இன்று கவனயீர்ப்புப் போராட்டம்




யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தால் இன்று கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இன்று வேலைநிறுத்த முன்னெடுக்கப்படுவதுடன் அதன் அடையாளமாக நண்பகல் 12 மணியளவில் யாழ். பல்கலைக்கழக பிரதான நுழைவாயில் முன்பாக ஒன்றுகூடிய பல்கலைக்கழக ஊழியர்கள் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

பல்கலைக்கழக கல்விசாராப் பணியாளர்களின் சம்பள முரண்பாடு, சம்பள அதிகரிப்பு மற்றும் அவர்களைப் பாதிக்கும் பிரச்சினைகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் அரசும் தொடர்ந்து ஏமாற்றி வருகின்றமைக்கு எதிர்ப்புத்தெரிவித்தே இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (அ)

## 14ஆவது யாழ் சர்வதேச வர்த்தகச் சந்தைக் கண்காட்சி நாளையதினம் முற்றவெளியில் ஆரம்பமாகவிருக்கிறது

நாளை ஆரம்பமாகவுள்ள 14 ஆவது யாழ் சர்வதேச வர்த்தகச் சந்தை கண்காட்சிக்கான ஏற்பாடுகள் துரித கதியில் இடம்பெற்றுவருகின்றன. நாளை 19, 20, 21 ஆம் திகதிகளில் முற்றவெளி மைதானத்தில் இந்த விற்பனையுடன் கூடிய கண்காட்சி இடம்பெறவுள்ளது.

ஏராளமான காட்சியறைகளையும், விற்பனைக் கூடங்களையும் கொண்ட இக்கண்காட்சியில் புதிய உற்பத்திகளின்



அறிமுகங்களும், விசேட விலைக் கழிவுகளும் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## பல்கலை கல்வி சாரா ஊழியர்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப்புகைத் தாக்கு!

கொழும்பு, ஜன.18

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்திற்கு அருகில் ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்டிருந்த பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களை கலைக்க பொலிஸார் கண்ணீர்ப்புகைத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்களின் சம்பள அதிகரிப்புடன் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் சம்பள அதிகரிப்புக்கும் கோரிக்கை முன்வைத்து நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் பணிப்புறக்கணிப்பு போராட்டத்துடன் இணைந்ததாக இன்று பிற்பகல் இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சம்பள முரண்பாடுகளைத் தீர்க்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காவிட்டால் தொடர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட நேரிடும் என பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான தொழிற்சங்க சம்மேளனம் தெரிவித்துள்ளது.

## உள்ளூர் உற்பத்திகளை அதிகரிப்பதனூடாக சுய பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும்!

### அமைச்சர் டக்ளஸ் வலியுறுத்தினார்

சுயதொழில் முயற்சிகளை விருத்தி செய்வதன் ஊடாக உள்ளூர் உற்பத்திகளை அதிகரித்து முயற்சியாளர்களின் சுய பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும் என சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதனூடாக நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் ஒவ்வொரு குடிமகனின் பங்களிப்பு இருப்பதற்கு ஏதுவான நிலைமை உருவாகும் எனவும் தெரிவித்துள்ளார்.

2 ➤



## ஜனாதிபதி ரணில் உகண்டா பயணம்

அணிசேரா நாடுகளின் மாநாட்டின் 19 ஆவது அரச தலைவர்கள் மாநாடு மற்றும் ஜி 77 மற்றும் சீனாவின் 3 ஆவது தென் மாநாடு என்பவற்றில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உகண்டாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ளார் என்று

2 ➤

# எம்.ஜி.ஆரின் 107வது பிறந்தநாள் யாழ்ப்பாணத்தில் கொண்டாட்டம்




மறைந்த தென்னிந்திய திரைப்பட நடிகரும் தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சருமான எம்.ஜி.ஆரின் 107வது பிறந்த தினம் யாழ்ப்பாணத்தில் வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது.

யாழ்ப்பாணம் பாசையூரில் நேற்று புதன்கிழமை அப்பகுதி மக்களும் இந்தியாவிலிருந்து வருகை தந்த எம்.ஜி.ஆர். ரசிகர் மன்ற உறுப்பினர்களும் இணைந்து கேக் வெட்டி எம்.ஜி.ஆரினுடைய பிறந்த தினத்தை கொண்டாடினார்கள்.

இதன்போது எம்.ஜி.ஆர். சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டதுடன் வறுமைக் கோட்டுக்குட்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப்பதிகளும் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

## உள்ளூர் உற்பத்திகளை.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ் மாவட்டச் செயலகத்தில் இன்று முற்பகல் சுய தொழில் முயற்சியாளர்களை வலுப்படுத்தும் நோக்கில் கலந்துரையாடலொன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் சுயதொழில் முயற்சியாளர்கள் தாம் எதிர் நோக்கியுள்ள தொழில்சார் நடைமுறை பிரச்சினைகளையும், வங்கிகள் ஊடாக கடன் வசதிகளை பெற முற்படும் போது இறுக்கமான நடைமுறைகளால் ஏற்படும் அசௌகரியங்கள் குறித்தும் அமைச்சரிடம் சுட்டிக்காட்டியிருந்தனர்.

குறித்த சுயதொழில் முயற்சியாளர்களின் கருத்துக்களில் அவதானம் செலுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா - உள்ளூார் உற்பத்திகளை மேம்படுத்துவதற்கான முதலீடுகளை எதிர்பார்க்கின்ற சுய தொழில் முயற்சியாளர்கள் அதற்கான திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிக்கும் பட்சத்தில் அதற்கான ஒத்துழைப்பினையும் வழிகாட்டல்களையும் வழங்க முடியும் எனதெரிவித்திருந்தார்.

அத்துடன் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் முற்சிகளை ஊக்குவிப்பதற்கு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் இருந்து நன்மைகளை பெற்றுக் கொள்வதற்கான முன்மொழிவுகளையும் வழங்க முடியும் எனவும் அமைச்சர் தெரிவித்திருந்தார்.

குறித்த கலந்துரையாடலில் யாழ். மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரன், மேலதிக அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) மாவட்டச் செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள் துறைசார் அதிகாரிகள், வங்கிகளின் முகாமையாளர்கள், சுயதொழில் முயற்சியாளர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர். (O1)

## ஜனாதிபதி ரணில் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி ஊடகப் பிரிவு இன்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உகண்டா குடியரசு ஜனாதிபதி யொவேரி முசேவெனியின் அழைப்பின் பேரிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

அணிசேரா நாடுகளின் மாநாட்டின் 19 ஆவது அரச தலைவர்கள் மாநாடு, "உலளாவிய கூட்டு செழுமைக்கான ஒத்துழைப்புக்களை விரிவுபடுத்தல்" என்ற தலைப்பில் ஜனவரி 19 மற்றும் 20 ஆம் திகதிகளில் உகண்டாவின் கம்பாலா நகரில் நடைபெறவுள்ளது.

அதனையடுத்து, ஜி 77 மற்றும் சீனாவின் 3 ஆவது தென் மாநாடு ஜனவரி 21 - 22 ஆம் திகதிகளில் "எவரையும் கைவிடக்கூடாது" என்ற தலைப்பில் கம்பாலா நகரில் நடைபெறவுள்ளது.

மேற்படி இரு மாநாடுகளிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றவுள்ளதோடு, ஆபிரிக்க வலயத்தில் காணப்படும் உலக தெற்கு நாடுகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளையும் சந்திக்கவுள்ளார்.

அணிசேரா நாடுகளின் அமைப்பில் 120 நாடுகள் அங்கம் வகிப்பதோடு, பெண்டூன்க் கொள்கையை மையப்படுத்தி அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் தேவைகளை நிறைவேற்றும் நோக்குடன் செயற்பட்டு வருகின்றது.

இலங்கை அணிசேரா நாடுகள் அமைப்பின் ஆரம்ப உறுப்பினர் என்பதோடு 1976 - 1979 அதன் தலைமைத்துவத்தையும் வகித்துள்ளது. 1976 ஆம் ஆண்டில் 5 ஆவது அரச தலைவர்கள் மாநாட்டை இலங்கை நடத்தியது.

ஜி 77 மற்றும் சீனாவின் 3 ஆவது தெற்கு மாநாட்டில் 134 நாடுகள் அங்கம் வகிப்பதோடு, வர்த்தகம், முதலீடு, நிலையான அபிவிருத்தி, காலநிலை அனர்த்தம், வறுமை ஒழிப்பு மற்றும் டிஜிட்டல் பொருளாதாரம் உள்ளிட்ட விடயங்களில் ஒத்துழைப்புக்களை பலப்படுத்தும் நோக்கில் நடத்தப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் மிகப் பெரிய கூட்டிணைவு என்ற வகையில், உலகளாவிய தெற்கு நாடுகள் தங்களது கூட்டு பொருளாதார தேவைகளை அறிவித்தல், மேம்படுத்தல் மற்றும் உலகளாவிய தெற்கு நாடுகளின் பேச்சு என்பவற்றிக்கு இந்த மாநாடு களம் அமைக்கும்.

ஜி 77 மற்றும் சீன மாநாட்டின் தலைமைத்துவத்தை இதுவரையில் கியூபாவும், அணிசேரா நாடுகள் அமைப்பின் தலைமைத்துவத்தை அசர்பைஜான் குடியரசும் வகித்து வரும் நிலையில், மேற்படி இரு மாநாடுகளுக்கும் இம்முறை உகண்டா குடியரசு தலைமைதாங்க உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் உகண்டா விஜயத்தில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன, காலநிலை அனர்த்தம் தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன ஆகியோரும் கலந்துகொண்டுள்ளனர். - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## தமிழர்களின் வாக்குகளைப் பெற ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டுக்கு எதிராக ஒப்பந்தங்கள் மற்றும் தீர்மானங்களில் இருந்து விலகுவதாக 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் காலத்தில் ராஜபக்ஷர்கள் மக்களுக்கு வாக்குறுதி வழங்கினார்கள். அந்த வாக்குறுதிகளுக்கு அமைய கோட்டபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை நாட்டு மக்கள் தோற்றுவித்தார்கள்.

இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்ட 30 - 1 தீர்மானத்துக்கு இணையனுசரனை வழங்கும் இணக்கப்பாட்டில் இருந்து இலங்கை விலகியுள்ள நிலையில் அந்த தீர்மானத்தில் குறிப்பிடப்பட்ட முக்கிய விடயங்களில் பல சட்ட வகிபாகத்துடன் தற்போது நிறைவேற்றப்பட்டுள்ளன.

காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம்,2017 ஆம் ஆண்டு நாடு கடத்தல் சட்டம்,இழப்பீட்டுக்கான அலுவலக சட்டம், பலவந்தமாக தடுக்கும் சட்டம், பாதிக்கபபட்டோர் மற்றும் சாட்சியாளர்களை பாதுகாக்கும் சட்டம் என்பன இயற்றப்பட்டுள்ளன. அண்மையில் பாராளுமன்றத்தில் ஒற்றுமை மற்றும் தேசிய நல்லிணக்கத்துக்கான சட்டம் இயற்றப்பட்டுள்ளன.

உண்மையை கண்டறிதல் மற்றும் தேசிய நல்லிணக்கத்தை ஸ்தாபித்தல் ஆணைக்குழுவை ஸ்தாபிக்கும் சட்ட வரைபுக்கான வர்த்தமானி புதுவருட தினத்தன்று வெளியிடப்பட்டுள்ளன. புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் சர்வதேச நாடுகளின் பணிப்புரைக்கு அமைய 2015 ஆம் ஆண்டு முதல் திருட்டுத்தனமாக இயற்றப்பட்ட சட்டங்கள் அனைத்தையும் வலுப்படுத்தும் வகையில் உண்மையை கண்டறிதல் மற்றும் தேசிய நல்லிணக்க ஆணைக்குழு சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டமூலத்துக்கு அமைய ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டால் தற்போது நடைமுறையில் உள்ள சாட்சி கட்டளைச் சட்டம் வலுவிழக்கப்படும். இராணுவத்தினருக்கு எதிராக எவர் வேண்டுமானாலும் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கலாம். பொய் சாட்சியம் வழங்கலாம். சரத் பொன்சேகாவை தவிர ஏனைய இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியும்.

தமிழ் மக்களின் வாக்குகளை பெற்றுக்கொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இராணுவத்தினரை காட்டிக் கொடுக்கும் வகையில் செயற்படுகிறார். ஆச்சரியம் என்னவென்றால். யுத்த வெற்றியை பிரதான தேர்தல் பிரசாரமாக கொள்ளும் ராஜபக்ஷர்கள் இராணுவத்தினருக்கு எதிரான சட்டமூலங்களுக்கு ஆதரவாக செயற்படுகிறார்கள். ஆகவே இந்த சட்டமூலத்துக்கு எதிராக ஒட்டுமொத்த மக்களும் ஒன்றிணைய வேண்டும். - என்றும் அவர் தெரிவித்திருக்கிறார். (அ)







உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# தென்கிழக்கு பல்கலை பொறியியல் பீட மாணவர்கள் காலநிலை மாற்ற நீர் மேளாண்மைச் செயலமர்வில்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

தென்கிழக்கு பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் சீனாவின் ஷென்சென் நகரில் உள்ள ஷென்சென் உயர் தொழில்நுட்ப நிறுவகத்தில் **(SIAT)** நடைபெறும் "காலநிலை மாற்றத்திற்கான நீர் மேலாண்மை" குளிர்கால செயலமர்வில் பங்கேற்கின்றனர்.

தென்கிழக்கு பல்கலைக்கழக பொறியியல் துறையைச் சேர்ந்த இஷ்கி, விதுசன், ஹேம பிரபா மற்றும் கவுசல்யா ஆகியோர் உள்ளிட்ட 6 நாடுகளில் உள்ள 11 பல்கலைக்கழகங்களில் இருந்து 40 பட்டதாரி மாணவர்கள் இச் செயலமர்விற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இச் செயலமர்வு ஜனவரி 8 ஆம் திகதி ஆரம்ப மாகி 2024 ஜனவரி 19 ஆம் திகதி வரை இரண்டு வாரங்களுக்கு இடம்பெறுகின்றது. நோர்வே, போலந்து, ஜேர்மனி, இலங்கை, மங்கோலியா மற்றும் சீனா ஆகிய ஆறு நாடுகளில் உள்ள 11 உயர்கல்வி நிறுவனங்களில் பேட்னர் நிறுவனமாக, இலங்கையின் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடம், 2011 ஆம் ஆண்டு முதல் 'CCWATER' என்ற மூன்றாண்டுத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.




புதிய புதுமையான டிஜிட்டல் கருவிகளைப் பயன்படுத்தி இலங்கையில் நிலையான மற்றும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவத்தை மேம்படுத்துவதில் கற்கவும், பகிர்ந்து கொள்ளவும், மாற்றத்தை ஏற்படுத்தவும், இந்த குளிர்கால செயலமர்வானது சர்வதேச அரங்கில் ஒரு வாய்ப்பை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

## நீண்ட போராட்டத்துக்குப் பின்னர் iOS செயலியை பயன்பாட்டுக்கு கொண்டுவந்தது JRide நிறுவனம்!




போக்குவரத்துச் சேவையினை ஒருங்கிணைக்கும் JRide இன் அப்பிள் செயலியும் தற்போது பயன்பாட்டுக்கு வந்துள்ளதாக யாழ்ப்பாணத்திலிருந்து இயங்கும் அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

நீண்ட போராட்டங்களின் பின் ஒருவாறாக JRide பயணிகளுக்கான அப்பினது iOS App அப்பிள் நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்றும், ஐ போன் பயனர்கள் அப்பிள் ஸ்டோரில் தமது செயலியினை நேரடியாகத் தரவிறக்க முடியும் என்றும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

Apple Store இல் JRide (Sri Lanka) என்ற பெயரிலும், Play Store இல் JRide - Beyond The Road என்ற பெயரிலும் அவர்களது செயலிகள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## காற்றுவெளி மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ் படைப்புகளை அனுப்புமாறு கோரிக்கை

காற்றுவெளி மின்னிதழின் மொழிபெயர்ப்பு சிறப்பிதழை வெளிவரவுள்ளது.

பிறமொழிகளிலிருந்து தமிழில் பெயர்க்கப்பட்ட படைப்புக்களை(கவிதை, சிறுகதை, பிற இலக்கியப் படைப்புக்கள்) படைப்பளர்களிடம் கோரியுள்ளதாக வெளியீட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வாசகர்களும் தங்கள் வாசிப்பில் கிடைத்த படைப்புக்களை அனுப்ப இயலுமெனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பெப்ரவரி 18 ஆம் திகதிக்கு முன்னதாக ஆக்கங்களை அனுப்பிடுமாறும் குறிப்பிட்டுள்ளனர். படைப்புகளை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி – **mahendran1954@hotmail.com**



# மசூதியை இடித்துவிட்டுக் கோயிலைக் கட்டியதில் எங்களுக்கு உடன்பாடில்லை

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கருத்து



ராமர் கோயில் திறப்பு விழாவை அரசியலாக்கக் கூடாது என்று அதிமுக கூறியுள்ள கருத்து தொடர்பான கேள்விக்கு பதிலளித்த தமிழகல அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், 'ராமர் கோயில் திறப்புக்கோ, மத நம்பிக்கைக்கோ திமுக எதிரி அல்ல. ஆனால், மசூதியை இடித்துவிட்டு கோயில் கட்டியதில் எங்களுக்கு உடன்பாடில்லை" என்றார்.

சேலத்தில் வரும் 21 ஆம் திகதி நடைபெற உள்ள திமுக இளைஞரணி மாநாட்டுக்கான சுடர் தொடர் ஓட்டத்தை அமைச்சரும், திமுக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் இன்று காலை தொடங்கி வைத்தார்.

முன்னதாக, சுடர் ஓட்டத்தை தொடங்கிவைத்த உதயநிதி செய்தியாளர்களின் பல்வேறு கேள்விகளுக்கும் பதிலளித்தார். அப்போது அவரிடம், "ராமர் கோயில் திறப்பு விழாவில் பங்கேற்பது அவரவர் விருப்பம் அதை அரசியலாகப் பார்க்கக்கூடாது" என்று அதிமுக கூறியுள்ள கருத்து தொடர்பாக கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த உதயநிதி ஸ்டாலின், 'அது அவர்களுடைய கருத்தாக இருக்கலாம். திமுக எந்த மதத்துக்கும், நம்பிக்கைக்கும் எதிரானது கிடையாது என்று கலைஞர் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். ராமர் கோயில் திறப்புக்கோ, மத நம்பிக்கைக்கோ திமுக எதிரி அல்ல. அங்கே கோயில் வருவது எங்களுக்குப் பிரச்சினை கிடையாது. ஆனால், அங்கே இருந்த மசூதியை இடித்துவிட்டு கோயில் கட்டியதில் எங்களுக்கு உடன்பாடு இல்லை. எங்கள் பொருளாளரும் ஏற்கெனவே இதுதொடர்பாக, "ஆன்மிகத்தையும் அரசியலையும் ஒன்றாக்காதீர்கள்" என்று சொல்லியிருக்கிறார் என்றார். (04)

# சீனாவின் மக்கள் தொகை தொடர்ந்தும் சரிவடைவு



சீனாவின் மக்கள் தொகை தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக கடந்த 2023 இலும் சரிவைக் கண்டுள்ளது.

இது குறித்து அந்த நாட்டின் தேசிய புள்ளியியல் அமைப்பு புதன்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது, நாட்டின் மக்கள் தொகையில் கடந்த 2023 ஆம் ஆண்டு 20 லட்சம் குறைந்துள்ளது. அந்த ஆண்டில் மட்டும் 6.9 லட்சம் பேர் மரணமடைந்தனர். இது, முந்தைய ஆண்டைப் போல் இருமடங்கு ஆகும். தற்போது நாட்டின் மொத்த மக்கள் தொகை சுமார் 140 கோடியாக உள்ளது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முந்தைய 2022இல் உச்சகட்டத்தில் இருந்த கொரோனா பரவல் கடந்த ஆண்டிலும் தொடர்ந்ததால் மரண எண்ணிக்கை இரட்டிப்பாகியிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

மேலும், மக்கள்தொகை பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக சீனா நீண்ட காலமாக பின்பற்றி வந்த கொள்கைகளால் பிறப்பு விகிதம் தொடர்ந்து குறைந்து வருவதும் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக மக்கள் தொகை சரிந்ததற்குக் காரணமாகக் கூறப்படுகிறது.

உலகின் மிகப் பெரிய மக்கள் தொகையைக் கொண்ட நாடாக சீனா இருந்து வந்தது. ஆனால், அந்த நாட்டின் மக்கள் தொகையை (142.57 கோடி) விஞ்சி இந்திய மக்கள் தொகை 142.86 கோடியாக அதிகரித்ததாக ஐக்கியநாடுகள் கடந்த ஆண்டு அறிவித்தமை நினைவு கூரத்தக்கது. (04)

# நியூசிலாந்து நாடாளுமன்ற உறுப்பினரின் மீது திருட்டுக் குற்றச்சாட்டுப் பதிவு செய்யப்பட்டது

நியூசிலாந்தின் முதல் புலம்பெயர் நாடாளுமன்ற உறுப்பினர் மீது திருட்டுக் குற்றச்சாட்டுப் பதிவு செய்யப்பட்டுள்ளது. உயர்தர அலங்கார பொருள்கள் விற்பனையகத்தில் சில முறை அவர் பொருள்களைத் திருடியதாகக் கூறப்படுகிறது.

அதற்கு முன்னர் அவர் தனது பதவியில் இருந்து வேலை நிமித்தமான அழுத்தம் காரணமாக விலகுவதாகவும் அதனால் தனது இயல்பு பாதிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஒக்லாந்தில் உள்ள பான்சன்பி என்கிற அழகுப் பொருள்கள் விற்பனையகத்தில் நியூசிலாந்து பசுமை கட்சியின் உறுப்பினரான கோல்ரிஸ் கஹ்ராமன் திருடியதாக நேற்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

நீதி மற்றும் வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளரான கஹ்ராமன், இஸ்ரேல் - ஹமாஸ் விவகாரத்தில் தொடர்ச்சியாக போர் நிறுத்தத்துக்காகக் குரல் கொடுத்து வருபவர்.

ஈரானைச் சேர்ந்த கஹ்ராமன், ஒக்ஸ்போர்டில் சட்டம் பயின்றவர். சிறுவயதில் ஈரான்- ஈராக் போரின் போது நியூசிலாந்தில் பெற்றோருடன் புகலிடம் அடைந்தார்.

2017 இல் அந்த நாட்டின் முதலாவது புலம்பெயர் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்வானார்.

பசுமை கட்சியின் தலைவர் ஜேம்ஸ் ஷா, நாடாளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டது முதல் கஹ்ராமன் பாலியல் ரீதியான வன்முறை, உடல் வன்முறை, கொலை மிரட்டல் உள்ளிட்டவற்றை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளார். (04)

# ராமர் கோயில் நினைவு அஞ்சல் தலைகள் இந்தியப்பிரதமர் மோடி வெளியிட்டார்



அயோத்தியில் உள்ள ராமர் கோயிலின் நினைவு அஞ்சல் தலைகளையும், உலகம் முழுவதும் உள்ள நாடுகளால் வெளியிடப்பட்ட ராமருக்கு அர்ப்பணிக்கப்பட்ட அஞ்சல் உறைகளின் புத்தகத்தையும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்டுள்ளார்.

அயோத்தியில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள ராமர் கோயிலில் சிலை பிரதிஷ்டை வரும் 22 ஆம் திகதி நடைபெற உள்ள நிலையில், இந்தியப் பிரதமர் மோடி குழந்தை ராமர் சிலையைத் திறந்துவைக்க உள்ளார். இந்த நிகழ்விற்கு பல்வேறு முக்கிய தலைவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

இதனையொட்டி அவர், ராமர் கோயில் நினைவு அஞ்சல் தலைகளை வெளியிட்டார்.

ராமர் கோயில், சூரியன், சராயு நதி மற்றும் கோயில் சிற்பங்கள் போன்ற படங்கள் அடங்கிய அஞ்சல் தலைகளை அவர் அறிமுகப்படுத்தினார். மேலும் உலகம் முழுவதும் இருக்கும் ராமர் பற்றிய அஞ்சல் உறைகள் அடங்கிய புத்தகத்தையும் அவர் வெளியிட்டார். (04)

# ஈரானுக்கு பாகிஸ்தான் பதிலடி! வான்வழித் தாக்குதல் நடத்தியது



பாகிஸ்தானில் ஈரான் நடத்திய ஏவுகணைத் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில், ஈரான் மீது பாகிஸ்தான் வான்வழி தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

ஈரான் எல்லையையொட்டிய பாகிஸ்தானின் பலூசிஸ்தான் மாகாணத்தில் செயல்பட்டு வரும் சன்னி பிரிவு ஜெய்ஷ் அல்-அதில் பயங்கரவாத அமைப்பின் 2 நிலைகள் மீது ஈரான் செவ்வாய்க்கிழமை ஏவுகணைகள் மற்றும் ஆளில்லா விமானங்கள் மூலம் அதிரடி தாக்குதல் நடத்தியது.

முன்னெப்போதும் இல்லாத வகையில் நடத்தப்பட்ட இந்த வான்வழி தாக்குதலில் 2 சிறுவர்கள் உயிரிழந்து, சிறுமிகள் மூவர் காயமடைந்தனர்.

இந்த நிலையில், தென்மேற்கு ஈரானின் சிஸ்தான் மற்றும் பலுசிஸ்தான் பகுதியில் வியாழன் அதிகாலை நடத்தப்பட்ட வான்வழி தாக்குதலில் ஏழு பேர் பலியானதாக மாகாணத்தின் துணை ஆளுநர் அலிரேசா தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

# தென்கிழக்கு பல்கலைக்கழத்தில் 2வது நாளாகவும் சுத்திகரிப்பு பணி

(நூருல் ஹுதா உமர்)

அண்மையில் இடம்பெற்ற வெள்ளப்பெருக்கின் காரணமாக தென்கிழக்கு பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தின் சில பகுதிகள் வெகுவாக பாதிக்கப்பட்டிருந்தது. இதில் பௌத்த, இந்து மற்றும் கிறிஸ்தவ தேவாலயங்களும் பாதிப்புகளுக்கு உள்ளாகியிருந்தன.

மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் தலைமையில் இரண்டாவது நாளாகவும் சுத்திகரிக்கும் நிகழ்வு இன்றும் இடம்பெற்றது.

இன்றைய சுத்திகரிப்புப் பணியில் அக்கரைப்பற்று மாநகரசபையின் தீ அணைப்பு பிரிவும் இணைந்து கொண்டது. இன்றைய நிகழ்வில் பௌத்த, இந்து மற்றும் கிறிஸ்த்தவ தேவாலயங்கள் ஊழியர்களால் சுத்தம் செய்யப்பட்டன.

உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கருடன் நூலகர் எம்.எம்.றிபாவுட்டீன், பதில் பதிவாளர் எம்.ஐ. நௌபர், கலை கலாச்சார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில், அரபு மற்றும் இஸ்லாமிய பீடத்தின் பீடாதிபதி எம்.எச்.ஏ. முனாஸ், வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் பீடாதிபதி கலாநிதி எஸ்.சபீனா எம்.ஜி.எச்., பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் ஏ.எம். எம். முஸ்தபா, வேலைப்பகுதி பொறியியலாளர் எம்.எஸ். எம். பஸில், மற்றும் பேராசிரியர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், கல்விசாரா ஊழியர் சங்க தலைவர் எம். ரீ.எம். தாஜ/தீன், செயலாளர் எம்.எம். முஹம்மட் காமில் உள்ளிட்ட பலரும் சுத்திகரிப்புப் பணிகளில் ஈடுபட்டனர்.

சுத்திகரிப்புப் பணிகள் இடம்பெற்றுவரும் அதே வேளை, சேதங்கள் தொடர்பில் விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருவதாகவும் எதிர்காலத்தில் இவ்வாறான அனர்த்தங்கள் ஏற்பட்டால் கையாளவேண்டிய நடைமுறைகள் தொடர்பில் ஆராய்ந்து வருவதாகவும் உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

அத்துடன், சேதங்கள், மீள் கட்டுமானம் மற்றும் எதிர்கால அனர்த்த தவிர்ப்பு திட்டவரைபுகள் தொடர்பிலும் விரைவில் சம்மந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடவுள்ளதாகவும் சுத்திகரிப்பு பணிகளில் இன்றும் மிகுந்த சிரத்தையுடன் ஈடுபட்டுள்ள பல்கலைக்கழக ஊழியர்களுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## முஸ்லிம் எயிட் ஊடாக மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் அன்பளிப்பு



(ஹஸ்பர் ஏ.எச்)

“முஸ்லிம் எயிட் ஸ்ரீலங்கா” அமைப்பினால் கிண்ணியா வலயக் கல்வி பிரிவுக்குட்பட்ட தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் உள்ள தி-கிண்-அல்-ஹிக்மா முஸ்லிம் மகா வித்தியாலய மாணவர்களுக்கு கல்வித்தரத்தினை மேம்படுத்த கற்றல் உபகரண பொதிகள் கையளிக்கப்பட்டன.

குறித்த பாடசாலையின் அதிபர் என்.எம்.அஹமட் நஷ்ரப் அவர்களின் தலைமையில் நேற்று பாடசாலை பிரதான மண்டபத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன. இதில் 237 மாணவர்களுக்கு தலா 8500 ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் தெரிவு செய்யபட்ட மாணவர்களின் கல்வியினை விருத்தி செய்ய ஒரு உந்து சக்தியாக இதன் மூலம் நன்மையடையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

கல்வியை மேம்படுத்த முஸ்லிம் எயிட் கடந்த காலம் பல திட்டங்கள் ஊடாக நடைமுறைப்படுத்தி வருகிறது இதன் ஒரு பகுதியாக குறித்த பாடசாலையின் மாணவர்களின் கல்வி வளர்ச்சியினை மேம்படுத்த நடைமுறைப்படுத்தப்பட்டது.

குறித்த நிகழ்வில் கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ. நசூஹர்கான், முஸ்லிம் எயிட் நிறுவனத்தின் பணிப்பாளர் ஏ.சி. ஃபைசர் கான், அல்-ஹாஜ் நவாஸ், அல்-ஹாஜ் அஜ்வர்தீன், முஸ்லிம் எயிட் நிறுவனத்தின் கல்வி அபிவிருத்திக்கான நிகழ்ச்சி திட்ட முகாமையாளர் முனீர் முஸ்தபா, கள உத்தியோகத்தர் றமீஸ் உள்ளிட்ட முஸ்லிம் எயிட் நிறுவனத்தின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

## அலங்கா நல்லூர் ஜல்லிக்கட்டில் வெற்றிபெற்ற ஆளுநர் செந்தில் தொண்டமானின் காளை!



(ஹஸ்பர் ஏ.எச்)

அலங்கா நல்லூர் ஜல்லிக்கட்டில் கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமானின் காளை வெற்றி பெற்றுள்ளது.

தமிழக அமைச்சர் மூர்த்தியினால் அலங்கா நல்லூரில் ஏற்பாடு செய்யப்பட்ட ஜல்லிக்கட்டுப் போட்டியில் வெற்றிபெற்ற செந்தில் தொண்டமானின் காளைக்கு பரிசாக தங்க நாணயத்தை தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் செந்தில் தொண்டமானிடம் கையளித்தார்.

## லிட்ரோ எரிவாயு நிறுவனம் விற்பனைக்கு வருகிறது!

கடந்த வருடம் அறுநூறு கோடி ரூபாய் (6 பில்லியன்) லாபம் ஈட்டிய லிட்ரோ எரிவாயு நிறுவனம் மற்றும் லிட்ரோ காஸ் டெர்மினல் (தனியார்) நிறுவனத்தை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ விற்பனை செய்ய அரசு அழைப்பு விடுத்துள்ளது.

தற்போது, இந்த இரண்டு நிறுவனங்களில் லிட்ரோ காஸ் நிறுவனத்தின் 99.936 சதவீத பங்குகள் அரசிடம் உள்ளன. லிட்ரோ காஸ் டெர்மினல் (பிரைவேட்) நிறுவனத்தில் 100 சதவீத பங்குகளையும் அரசாங்கம் கொண்டுள்ளது.

அதன்படி, தற்போது திறைசேரிக்கு சுமையாக இல்லாத லிட்ரோ காஸ் நிறுவனம் மற்றும் லிட்ரோ காஸ் டெர்மினல் நிறுவனங்களின் அரச பங்குகளை விற்பனை செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ரெத-46)

## திருமறைக் கலாமன்றத்தின் வருடாந்த பொங்கல் விழா கலை நிகழ்ச்சிகள்

தைத்திருநாளை சிறப்பிக்கும் வகையில் திருமறைக் கலாமன்றத்தால் வருடந்தோறும் நடத்தப்பட்ட வருகின்ற பொங்கல் விழாவின் முதலாவது பகுதியான பொங்கல் வைபவம் கடந்த 15 ஆம் திகதியன்று சிறப்பாக நடந்தேறியது.

அதன் இரண்டாவது பகுதியான கலை நிகழ்ச்சிகள் நாளை மறுதினம் சனிக்கிழமை மாலையில் இல.238,பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாடடுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் திரு.ம.பற்றிக் டிறஞ்சன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

கலை நிகழ்ச்சிகளாக கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவிகளின் கிராமிய நடனம், திருமறைக் கலாமன்ற இசைக் கலைஞர்களின் பொங்கல் பாடல்கள், மன்ற நாடகப் பயிலக மாணவர்களின் ‘இதுவும் கடந்து போகும்’ நாடகம் என்பவற்றுடன் ஜொணி மதுரநாயகம், தர்மினி றஜீபன் ஆகியோரின் கவிதை நிகழ்வும் இடம்பெறும்.



# 14 வது யாழ் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் சூர்யாவின் விசேட விலைக் கழிவுகள் உங்களுக்கு







நாளை ஆரம்பமாகி 3 தினங்கள் நடைபெறவுள்ள 14 வது யாழ் சர்வதேச வர்த்தக கண்காட்சியில் சூர்யா தயாரிப்புகளின் காட்சியறையும் இடம்பெறுகிறது.

தமது உயர் தரத்திலான ஊதுவத்திகள், தீப்பெட்டிகள் மற்றும் சாம்பிராணி போன்றவற்றை 19 ஆம் திகதியிலிருந்து 21ஆம் திகதி வரையில் காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை முற்றவெளி மைதானத் தில் நடைபெறும் இந்தக் கண்காட்வியில் அமைந்துள்ள சிறப்புக் காட்சியறையில் விசேட விலைக் கழிவில் வாங்கி மகிழ்ச்சியை அனுபவிக்குமாறு சூர்யா நிறுனத்தினர் அனைவரையும் அழைக்கின்றார்கள்.







## பாதிக்கப்பட்ட வீதிகள், பாலங்களை புனரமைக்குமாறு அமைச்சர் பணிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மாவட்டத்தில் அண்மையில் டீ.எஸ்.சேனநாயக சமுத்திர வான் கதவுகள் திறக்கப்பட்டதனால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக சேதமடைந்த வீதிகள், பாலங்கள் மற்றும் கால்வாய்களை புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை துரிதப் படுத்துமாறு வீதி, நெடுஞ்சாலைகள், ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டபிள்யூ.எம்.வீரசிங்கவின் அழைப்பின் பேரில் அம்பாறை மாவட்டத்திற்கு விஜயம் செய்த அமைச்சர், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீதிகள் மற்றும் பாலங்களை பார்வையிட்டார்.

இதன்போது வெள்ளத்தால் சேதமடைந்த வீதிகள்,பாலங்கள் தொடர்பான சேத விபரங்களை சமர்ப்பிக்குமாறும், புனரமைப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

## புத்தளம் நகர சபைக்கு கழிவகற்றும் வாகனங்கள்

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

புத்தளம் நகரில் அதிகரித்து வரும் குப்பைகள் அகற்றுவதில் ஏற்படும் தாமதத்திற்கு காரணமாக மனித வளம் மற்றும் இயந்திரப் பற்றாக்குறை காணப்படுவதாக நகர சபை செயலாளர் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டபோது புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நகர அபிவிருத்திக் குழுத் தலைவருமாகிய அலி சப்ரி றஹீம் இடம் சுட்டிக்காட்டப்பட்டது.

இது விடயமாக மக்கள் சந்திப்புக்களின் போதும் தமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் தெரிவித்த புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர், தனது சொந்த நிதியின் ஊடாக ஐந்து டைடோ வண்டிகளையும் ஒரு டக்டர் இயந்திரத்தையும் புத்தளம் நகர சபைக்கு பெற்றுத் தருவதாக உறுதியளித்து, வடமேல் மாகாண ஆளுநர் முன்னிலையில் வண்டிகளையும் அதற்கான ஆவணங்களையும் புத்தளம் நகர சபை செயலாளர் மற்றும் அதிகாரிகளிடம் கையளித்தார்.

இதன் ஊடாக இனிவரும் காலங்களில் வீடுகளில் காணப்படும் உணவுக் கழிவுகளை தனியாகப் பிரித்து தினசரி வரும் டைடோக்களுக்கு வழங்குவதன் மூலம் சுகாதாரமாக தமது சூழலை புத்தளம் மக்கள் வைப்பதற்கு வசதியாக அமையும் என நிகழ்வில் உரையாற்றியவர்கள் குறிப்பிட்டனர்.

## முன்பள்ளி மாணவர்களினது விடுகை விழாவும் பரிசளிப்பும்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது அரபாத் மில்லேனியம் முன்பள்ளி மாணவர்களின் 32வது விடுகை விழாவும்,பரிசளிப்பு நிகழ்வும் அண்மையில் சாய்ந்தமருது லீமேரிடியன் வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.முஷாரப் பிரதம அதிதியாக கலந்து கொண்ட மேற்படி நிகழ்வில் சிறார்களின் கலை நிகழ்வுகளும் மேடையேற்றப்பட்டன.


JRIDE
BEYOND THE ROAD

Safety and comfort are our concern



# ஜேரைட்
# JRIDE

## TAXI APP FROM JAFFNA
## இலங்கை முழுவதும் | Islandwide



ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.

## நாங்கள் தயாராகிவிட்டோம்!

**யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)**

உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.

DOWNLOAD PASSENGER APP

இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!




இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!

YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE

GET IT ON Google Play
Download on the App Store



## SCHEDULED BOOKING

New Feature
புதிய வசதி

நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?

**விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?**

எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.

HOTLINE : 0706563213

**JRIDE TAXI SERVICE**
**SPEED IT NET**
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
+94 21 222 8358

மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.01.2024 இல் வெளியிடப்பெற்றது.